OS 50/2021
பி.வா.சா.2 விஜயசேகர் த/பெ சந்திரன்
நாள் 10.02.2026

**குறுக்கு விசாரணை**

1. எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதில் உள்ள விவரங்களை நான் சொல்லி தான் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சந்திரன் எனது தகப்பனார். 2ம் பிரதிவாதி விஜயா எனது தாயார். நான் 1979ல் பிறந்தேன். 26.06.1991ம் தேதியில் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 11 வயது. எந்த சர்வே எண் சொத்து அடமானம் எழுதப்பட்டது என்று அந்த நேரத்தில் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. எவ்வளவு தொகைக்கு அடமான கடன் எழுதப்பட்டது என்றால் ரூ. 5 ஆயிரம் மற்றும் ரூ.19 ஆயிரம் தொகைக்கு எழுதப்பட்டது. தாவா சொத்துகள் எனது தாத்தா பெருமாள் என்பவரின் சொத்து என்றால் சரிதான். இரண்டு அடமானகடன்களை எந்த தேதியில் பைசல் செய்வதற்காக கேட்டார்கள் என்றால் 2000 ஆண்டு மே மாதம் கேட்டார்கள் தேதி நியாபகம் இல்லை. ராஜி முன்னிலையில் பணத்தை கொடுத்துவிட்டு பத்திரம் வாங்கி கொண்டார்கள் என்றால் பணம் கொடுக்கவில்லை பத்திரம் மட்டும் ராஜேஸ்வரி அம்மாள் வாங்கி கொண்டார்.

2. பணம் கொடுக்கவில்லை என்றும் பத்திரமும் கொடுக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தோமா என்றால் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டதா என்றாலும் புகாரோ வழக்கோ தாக்கல் செய்யவில்லை. ராஜேஸ்வரி அம்மாள் பணத்தை கொடுத்துவிட்டார் என்றாலும் நாங்கள் பைசல் ரசீது செய்து கொடுப்பதாக கூறிவிட்டு அவ்வாறு செய்யவில்லை என்றால் அவர் பணமே கொடுக்கவில்லை. பணம் கொடுத்ததால் தான் நான் புகாரோ அல்லது வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து கரம்பாக உள்ளதா என்றால் ஆமாம் கரம்பாக தான் உள்ளது. எந்த வருடத்தில் எந்த தேதியில் நிலத்தை சமன்படுத்த எனது தகப்பனார் பணம் கேட்டார் என்றால் 2007ல் கேட்டார். நிலம் கரம்பாக இருப்பதால் அதனை சமன்படுத்த பணம் கேட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நிலம் வேண்டாம் என்று வாதிகள் கூறியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 10.02.2007ல் 1 லட்சமும் 11.06.2008ல் 50 ஆயிரமும் கடன் பெற்றதாக கூறியிருக்கும் தேதியில் எனக்கு என்ன வயது என்றால் 27 வயது.

3. மேற்படி பி.வா.சா.ஆ.10 மற்றும் 11 ஆகிய 2 பாண்டுகள் யார் எழுதியது என்றால் துரைராஜ் கண்ணமங்கலம் என்பவர் எழுதினார். எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிர்வழக்குரையின் 8வது பத்தியில் 1 லட்சம் ரூபாய் செலவு செய்து சமன்படுத்தியதாகவும் மேலும் பெருமாள் வாங்கிய ரூபாய் 50 ஆயிரம் கடனை பைசல் செய்ததாக விவரம் உள்ளது. பெருமாள் என்பவர் கடன் வாங்கிய கடன் பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 பாண்டுகளும் நானும் எனது தகப்பனாரும் தயார் செய்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் 2 பாண்டுகளும் புதிய தாளில் இருப்பதாக இருக்கிறது என்றால் நாங்கள் ஆவணத்தை பத்திரப்படுத்தி வைத்திருந்தோம். உண்மையில் பத்திரப்படுத்தி வைத்திருந்தால் மேற்படி 2 தாள்களும் பழைய தாள்களாக இருந்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

4. 50 ஆயிரம் வாங்கிய பி.வா.சா.ஆ.11 பாண்டில் யார் சாட்சி கையொப்பம் போட்டது என்றால் பத்மநாபன், ஏழுமலை சாட்சி கையொப்பம் போட்டார்கள் அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். அந்த பாண்டில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. தாவா சொத்துகள் பெருமாளின் சொத்து என்பதால் வாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.